17th March 1959]

SRI S. M. ANNAMALAI : 1957-வது ஆண்டில் 12,284 ரூபாய் சாங்க்ஷன் செய்யப்பட்டது என்றும் 11,308 ரூபாய் செலவழிக்கப் பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த வித்யாசம் என் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இதைத்தான் ஸ்ரீ ஜெகந்நாதன் கேட்ட கேள்விக்கு பதிலில் சொன்னேன், ஒரு ஆயிரம் ரூபாய் குறைவாக செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று. பரிசு கொடுப்பதில் கொஞ்சம் முன் பின் இருக்கத்தான் செய்யும். ஆயிரம் ரூபாய் குறைவாக செலவழித்தது ஒரு பெரிய காரியம் அல்ல.

SRI A. A. RASHEED : Sir, may I know whether these designs are patented to protect them from being copied by mill owners?

THE HON. SRI R. VENKATARAMAN : I do not think so but it is a good suggestion. Probably the handloom weavers may think of going in for patents.

Multi-purpose co-operative society

*847Q.—SRI T. VELUCHAMI : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

நெல்லை ஜில்லா, ஆலங்குளம் பிளாக்கில் (1) காடுபட்டி கிராமத்தில் ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் (2) மருக்காலங்குளம் கிராமத்தில் ஒரு பலநோக்குக் கூட்டுறவு சங்கமும் அமைக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI R. VENKATARAMAN : The proposal to start a multi-purpose co-operative society in Kadupatti village in Alangulam Block of Tirunelveli district has been approved and the society registered on 23rd January 1959.

A proposal to organize a similar society in Marukkalangulam village has been received by the Deputy Registrar, Tirunelveli, and he has forwarded it to the District Co-operative Central Bank, which is the financing agency for the proposed society, for its recommendation. Further action to register the society will be taken on receipt of the report of the Central Bank.

SRI T. VELUCHAMI : சில மெம்பர்கள் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு ரிஜிஸ்தர் செய்வதற்கு கூட்டுறவு சென்ட்ரல் பாங்கு பைனான்சிங் ஏஜென்சி ரெக்கமண்ட் செய்ய கொஞ்சம் காலதாமதம் செய்கிறார்கள். ஒருக்கால் அவர்கள் சில கிராமங்களில் பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு ஒத்தாசை செய்வதற்கு சம்மதிக்கவில்லை என்றால் அந்த கிராமத்தில் கடன் வசதி செய்வதற்கு சர்க்கார் வேறு என்ன மாற்று திட்டம் வைத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : கடன் கொடுக்கிறது என்றால் யாருடைய பொறுப்பிலாவதுதான் கொடுக்கவேண்டும். சென்ட்ரல் பாங்கு அதையெல்லாம் யோசனை செய்துதான் இந்த பாங்குகளை வைக்கலாம் என்று சிபாரிசு செய்கிறார்கள். அவர்கள் சிபாரிசு இல்லாமல் பாங்குகள் ஆரம்பித்து யார் வேண்டுமானாலும் நடத்தலாம் என்ற நிலைமை ஏற்பட்டால் கொடுக்கிற பணத்திற்கு பொறுப்பு யாரும் ஏற்றுக்கொள்ளாத நிலைமை ஏற்படுகிறது. எந்த விதமான யோசனையும் செய்து சென்ட்ரல் பாங்கு ஒன்றும் செய்யவில்லை என்றால் அதை ரிஜிஸ்த்ரார் அவர்களுக்கு எழுதினால் அவர்கள் அதைப்பற்றி பரிசீலனை செய்வார்கள்.